(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 3(7).]

# பாராளுமன்றம்

## 3 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2019 செப்தெம்பர் 20 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2019 ஒக்டோபர் 08, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

காலவிதிப்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நம்பிக்கைப்பொறுப்பு பற்றுச்சீட்டுகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 51 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 19 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2019 மார்ச் 05 ஆம் திகதிய 2113/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.09.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 51 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 19 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2019 மார்ச் 07 ஆம் திகதிய 2113/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.09.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.3),— 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 51 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 19 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2019 ஏப்ரல் 09 ஆம் திகதிய 2118/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.09.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— நிதித்தொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித்தொழில் சட்டத்தின் 69 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 33 ஆம் பிரிவின் கீழ் உரிமமளிக்கப்பட்டுள்ள நிதிக் கம்பனியொன்றினை ஒடுக்குவதிலான உரிமைக் கோரிக்கைகளின் முன்னுரிமை தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2019 மே 31 ஆம் திகதிய 2125/58 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.09.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 164 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் சைகைகள், சமிக்ஞைகள், அடையாளங்கள் மற்றும் வீதிக் குறியீடுகள் தொடர்பில் போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 யூன் 18 ஆம் திகதிய 2128/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.09.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

இலங்கை சுற்றாடலியல் தொழில் வல்லுநர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2019 நவம்பர் 05, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

55/ ’18

கௌரவ ஹேஷா விதானகே,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கமத்தொழில் அமைச்சின் கீழ் ஹதபிம அதிகாரசபை என்ற பெயரில் நிறுவனமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி நிறுவனத்தின் பிரதான கடமைகள் யாவை என்பதையும்;

(iii) தற்சமயம் மேற்படி அலுவலகங்கள் இயங்கிவரும் கட்டிடத்தின் பெயர் மற்றும் முகவரி யாது என்பதையும்;

(iv) இக்கட்டிடத்துக்கு மாதாந்தம் மற்றும் வருடாந்தம் செலுத்தப்படும் வாடகை எவ்வளவு என்பதையும்;

(v) இந்நிறுவனத்தை கமத்தொழில் அமைச்சு இயங்கும் கட்டிடத்திலேயே கொண்டு நடாத்துவதற்கு அமைச்சிடமுள்ள வேலைத்திட்டம் என்னவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

129/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i ) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி தாபிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(ii) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனியின் ஆரம்ப நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி தாபிக்கப்பட்ட திகதி தொடக்கம் இறுதி பணிப்பாளர் சபை வரை அதன் பணிப்பாளர் சபையிலிருந்த ஆட்களின் பெயர்கள், முகவரிகள், கல்வித் தகைமைகள் மற்றும் பெற்றுள்ள சம்பளங்கள் மற்றும் ஏனைய அனுகூலங்கள் தனித்தனியாக யாவை என்பதையும்;

(iv) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி ஆரம்பம் தொடக்கம் அடைந்துள்ள நட்டமானது வருடாந்தம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(v) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனியானது கடன் பெற்றுள்ள மற்றும் கடன் செலுத்தவுள்ள அரச நிறுவனங்கள் மற்றும் அக்கடன் தொகைகள் யாவை என்பதையும்;

(vi) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனியின் எதிர்காலம் தொடர்பாக அரசாங்கம் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

371/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான மஹவில தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2000 முதல் 2015 ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

441/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2018.09.01 ஆம் திகதியன்றுள்ளவாறு களுத்துறை மாவட்டத்தில் இனங்காணப்பட்ட அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கை, அங்கவீனத்தின் தன்மை, பால்நிலை, அங்கவீன நிலைமையானது பிறப்பின் மூலம் ஏற்பட்டதா அல்லது விபத்தின் மூலம் ஏற்பட்டதா என்பனவற்றை வயதின் அடிப்படையில் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அங்கவீனமுற்ற நபரினதும் பெயர், முகவரி, பொறுப்பாளரின் பெயர், கிராம உத்தியோகத்தர் பிரிவு வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) பிரதேச செயலகங்களின் ஊடாக அங்கவீனமுற்ற நபர்கள் பெற்றுக் கொள்ளும் உதவித்தொகையின் அளவு மற்றும் அவர்களின் அங்கவீனத்தின் தன்மை வெவ்வேறாக யாவை யாதென்பதையும்;

(iv) உதவி கிடைக்கவேண்டியிருந்தும் உதவியினைப் பெறாத நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) மேற்படி (i v) இல் குறிப்பிடப்பட்டுள்ள குழுவினர் சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

515/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் “பங்கேற்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்” கீழ் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை அலுவலர் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி அலுவலர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி அலுவலர்களுக்கு மாதாந்த சம்பளம் அல்லது கொடுப்பனவு வழங்கப்படுவதாயின், அது எவ்வளவென்பதையும்;

(iv) அவ்வாறு ஆட்சேர்க்கப்பட்ட ஒவ்வொரு அலுவலரதும் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், உரித்தாகின்ற கிராம அலுவலர் பிரிவு மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு ஆகிய தகவல்கள் அடங்கிய பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) குறித்த கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக ஒதுக்கியுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி கருத்திட்டத்தின் மூலமாக எதிர்பார்க்கப்படும் பயனுள்ள பெறுபேறுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

660/ ’18

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நுகர்வோர் அலுவல்கள் தொடர்பான அதிகாரசபை தாபிக்கப்பட்டதன் முக்கிய நோக்கங்கள் யாவை என்பதையும்;

(ii) அதன் பணிகள் யாவை என்பதையும்;

(iii) நுகர்வோர் அலுவல்களுக்கு ஏற்புடையதாக மேற்கொள்ளப்படுகின்ற எவ்வாறான குற்றங்கள் தொடர்பாக மேற்படி அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்க முடியுமென்பதையும்;

(iv) அதிகாரசபையின் அதிகாரங்கள் மற்றும் குற்றவாளிகளுக்கு எதிராக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2017 ஆம் ஆண்டில் மேற்படி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட,

(i) சுற்றி வளைப்புகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டங்களின் எண்ணிக்கையும் அவை மேற்கொள்ளப்பட்ட இடங்களும் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நீண்ட தூர சேவைகள் பயணிகள் போக்குவரத்து பேருந்துகள் நிறுத்தப்படுகின்ற அநேகமான உணவகங்களில் அதிக விலைக்கு உணவுகளை விற்பதோடு தரக்குறைவான உணவுகளை விற்பதாகவும், இதனால் நுகர்வோர் தெரிவு வரையறுக்கப்பட்டிருப்பதனால் நுகர்வோர் பெரிதும் அசௌகரியத்துக்கு உள்ளாகின்றார்கள் என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா;

(ii) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

754/ ’19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அல்லது சிறை வைக்கப்பட்டுள்ள முப்படையின், பொலிஸின் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பல்வேறு மட்டங்களையும் சேர்ந்த அலுவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மற்றும் சிறை வைக்கப்பட்டுள்ளவர்கள் அடங்கலாக நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள சகல அலுவலர்களுக்கும் எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலைமை யாது என்பதையும்;

(iii) இவர்களில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள அலுவலர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் மேற்படி தீர்ப்பு சம்பந்தமான தவறுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள பயங்கரவாதத்தை தோல்வியுறச் செய்யும் போருக்கு ஒத்துழைப்பு வழங்கிய “சத்ய கவேசகயோ” அமைப்பின் நிஷாந்த த அல்விஸ் அவர்கள் உள்ளிட்ட பல்வேறு மட்டங்களையும் சேர்ந்த சிவில் பிரசைகளின் எண்ணிக்கை யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா;

(இ) இன்றேல், ஏன்?

873/19

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில் துறை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மின்சாரக் கட்டணத்தை செலுத்தாமையினால் இலக்கம் 02, ஓத்தர வீதி, வராதல, மெல்லவகெதர என்ற முகவரியைச் சேர்ந்த திரு கே.எச்.எஸ்.டீ. ஹேமசிறியின் வர்த்தக நிலையம் மற்றும் வீட்டுக்கான மின்சார இணைப்பு 2018.01.17 ஆம் திகதி துண்டிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) மேற்படி திகதியளவில் திரு. ஹேமசிறியின் மின்சார கட்டணச் சிட்டை அவருக்கோ அல்லது அவரது வீட்டுக்கோ வழங்கப்படவில்லை என அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) திவுலபிட்டி இலங்கை மின்சார சபை அலுவலகம் இந்நிலைமையினை ஏற்றுக்கொண்டு மேலதிக கட்டணமின்றி மின்னிணைப்பை மீண்டும் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மின்சாரத்தை துண்டித்து மீண்டும் இணைப்பை வழங்குவதற்கு அறவிடப்படும் கட்டணத்தின் ஊடாக இ.மி.ச. ஆண்டொன்றுக்கு பெறும் வருமானம் எவ்வளவென்பதையும்;

(ii) ரூ. 1,250/- நிலுவைக்கு மின்சாரத்தை துண்டிக்கும் போது, ரூ.1,430/- மீண்டும் இணைப்பை ஏற்படுத்துவதற்கான கட்டணமாக செலுத்தவேண்டி ஏற்படுவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

882/ '19

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் காணப்படும் சிறு குளங்கள், ஆகாயத் தாமரை "ஜப்பான் ஜக்கோனியா" போன்ற நீர்த்தாவரங்களின் ஆக்கிரமிப்பால் துரிதமாக தூர்ந்து வருவதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி நீர்த்தாவரங்களின் ஆக்கிரமிப்பு "கட்டியாவ குளம்" போன்ற நடுத்தர அளவிலான குளங்களுக்கும் பரந்துள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) மேற்படி நீர்த்தாவரங்களின் ஆக்கிரமிப்பு எதிர்காலத்தில் நெற் செய்கையில் தாக்கத்தை ஏற்படுத்துவதால் அது தேசிய ரீதியான ஒரு பிரச்சினையாக மாறுவதற்கான வாய்ப்பு உள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) மேற்படி நீர்த்தாவரங்களின் ஆக்கிரமிப்பை முழுமையாக நிறுத்துவதற்காக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

936/ '19

கௌரவ முஹம்மது நசீர்,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டத்தின், கரைத்துறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவின், ஹிஜ்ராபுரம் கிராமத்தில் வசிக்கும் முஸ்லிம் மக்களது பாரம்பரிய காணிகள், யுத்த சூழ்நிலை நிறைவுற்றதன் பின்னர் அவர்களுக்கு மீள ஒப்படைக்கப்படுவது நிராகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஹிஜ்ராபுரம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் மூலமாக "சனாதிபதியிடம் கூறுங்கள்" வலைப்பின்னல் நிகழ்ச்சித்திட்டத்தினூடாக முல்லைத்தீவு மாவட்ட செயலாளருக்கு இவ்விடயம் தொடர்பாக PRE/2017/N/046127 இலக்கமுடைய 2017.09.18 ஆம் திகதிய முறைப்பாடு முன்வைக்கப்பட்டிருந்த போதும், அது தொடர்பாக இதுவரையில் நிலையானதொரு தீர்வு வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி முறைப்பாடு மற்றும் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் துரிதமாக ஆராய்ந்து தீர்வொன்றினை பெற்றுத் தருவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

937/ '19

கௌரவ விதுர விக்ரமநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இங்கிரிய, காமினி மத்திய மஹா வித்தியாலயத்தின் மாணவர்களின் பணம், பல வருடங்களாக தவறாகப் பயன்படுத்தப்படல் மற்றும் மேலும் பல முறைகேடுகள் பற்றி மாகாண கல்வி உள்ளகக் கணக்காய்வு பிரிவுக்குக் கிடைத்துள்ள முறைப்பாடொன்றுக்கு அமைய கணக்காய்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது என்பதையும்;

(ii) கணக்காய்வுப் பரிசோதனைக்கு அமைய, தவறான நடவடிக்கைகள் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய ஆட்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, ஹொரணை வலயக் கல்விப் பணிப்பாளர் முதல் மேல் மாகாண கல்வி அமைச்சர் வரை சகல அலுவலர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், இதுவரை தீர்வு வழங்கப்படவில்லை என்பதையும்;

(iii) குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களை பாடசாலையிலிருந்து நீக்காத பட்சத்தில், தனக்கு இடமாற்றம் வழங்குமாறு அதிபர் சமர்ப்பித்த கோரிக்கைக்கு அமைய அதிபருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) பாடசாலையை கட்டியெழுப்புவதற்கு பெரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ள அதிபரை இடமாற்றம் செய்து குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களை அதே பாடசாலையில் தடுத்துவைத்து குறித்த நிதிசார் குற்றச்சாட்டுக்களை சிறுவிடயமாகக் கருதி செயற்படுவதன் மூலம் குற்றம் சாட்டப்பட்டோர் பலமடைவதன் காரணமாக பெற்றோர் மற்றும் மாணவர்கள் அநாதரவாக்கப் பட்டுள்ளார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இவ்வாறு பாடசாலை மாணவர்களின் பணத்தை தவறாகப் பயன்படுத்துகின்ற ஆட்களை பாதுகாப்பது தவறான முன்மாதிரியாக இருக்காதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

938/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 மார்ச் மாதத்தில் 50,000 புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் நோக்கில் எட்டு விசேட கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) அவ் ஒவ்வொரு கடன் முறைமையின் கீழும் கடன்களைப் பெற்றுக்கொண்ட பயனாளிகளின் எண்ணிக்கையினை ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையிலும் வெவ்வேறாக குறிப்பிடுவாரா என்பதையும்;

(iii) மேற்குறித்த எட்டு கடன் திட்டங்கள் தொடர்பிலும் வழங்கப்பட்ட வட்டி நிவாரணங்களின் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) அவ் வட்டி நிவாரணங்கள் அரச நிதிக்கணக்கீட்டில் குறிப்பு வைக்கப்பட்டுள்ள முறைமை யாதென்பதையும்;

(v) மேற்குறித்த எட்டு கடன் திட்டங்களின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட புதிய கருத்திட்டங்களின் மூலமாக உருவாக்கப்பட்ட புதிய தொழில் வாய்ப்புக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1010/ '19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) விமான சேவைகளை வழங்கியமைக்காக இலங்கை விமானப் படைக்கு அரச நிறுவனங்களிலிருந்து வருமதியாகவுள்ள நிலுவைத் தொகை காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த ஒவ்வோர் அரச நிறுவனத்தின் பெயர், நிலுவையாகவுள்ள தொகை மற்றும் நிலுவையாகவுள்ள காலப்பகுதியை தனித்தனியாக சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) இலங்கை விமானப் படை நிலுவைத் தொகையை அறவிட்டு கொள்வதற்காக எடுத்துள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1046/ ’19

கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்,— ஆரம்பக் கைத்தொழில்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் மாவட்டத்தில் பணிபுரியும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் இடமாற்றம் கிடைக்காது ஒரே கிராம அலுவலர் பிரிவினுள் 5 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக இடையறாது பணிபுரிந்து வருகின்றனர் என்பதையும்;

(ii) அதன் காரணமாக பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர் என்பதையும்;

(iii) அக்கிராமங்களில் மக்களது அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் பின்னடைவு காணப்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மன்னார் மாவட்டத்தில் 5 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாகப் பணிபுரியும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ii) ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1152/ ’19

கௌரவ கே. காதர் மஸ்தான்,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சருமானவரை கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 ஆம் ஆண்டில், காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுவினால் மீள் குடியேற்ற நடவடிக்கைகளுக்காக தலைமன்னார் பியர் பகுதியில் காணப்படும் பாலமீன் ஓடை எனும் 100 ஏக்கர் காணி வழங்கப்பட்டதனை அவர் அறிவாராவென்பதனையும்;

(ii) ஆமெனில், இக்காணியில் குடியமர்த்தப்பட எதிர்பார்க்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதனையும்;

(iii) காணிகள் வழங்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் பொது அமைப்புகளின் பெயர்கள் மற்றும் ஏனைய விபரங்கள் யாதென்பதையும்;

(iv) இக்காணியில் குடியமர்த்தப்பட்ட ஆரம்பக் குடியிருப்பாளர்களில் எத்தனை குடும்பங்கள் இதுவரை காலம் தொடர்ந்தும் வாழ்ந்து வருகின்றனர் என்பதனையும்;

(v) இடைப்பட்ட காலப்பகுதியில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கையும் அதன் விபரங்கள் யாவையென்பதையும்;

(vi) இதுவரை குடியமர்த்தப்பட்ட மொத்தக் குடும்பங்களில் எத்தனை குடும்பங்களுக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதென்பதனையும்;

(vii) இதுவரை காணி உறுதிப்பத்திரம் கிடைக்கப்பெறாத குடியிருப்பாளர்களுக்கான காணி உறுதிப்பத்திரம் எப்போது வழங்கப்படுமென்பதனையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2019 நவம்பர் 06, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

60/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மேட்டுக் காணிகளில்லாத ஆட்களுக்கு தமது வயல் காணியில் 10 பர்சஸ் அளவை நிரப்பி வீடொன்றை அமைத்துக்கொள்ள அனுமதி வழங்குதல் நீண்ட காலமாக நடைமுறையிலிருந்தென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) தற்போது மேட்டுக் காணிகளில்லாத ஆட்களுக்கு தமது வயல் காணியில் 10 பர்சஸ் அளவை நிரப்பி வீடொன்றை அமைத்துக்கொள்ள வழங்கப்பட்டிருந்த வாய்ப்பு இழக்கச் செய்யப்பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆகையால் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் காணியில்லாத பெரும் தொகையான மக்கள் நிர்க்கதி நிலைமைக்கு உள்ளாகியுள்ளனரென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வயல் காணியில் 10 பர்சஸ் அளவை நிரப்புவதற்காக இன்றளவில் கமநல சேவைகள் திணைக்களத்திற்கு விண்ணப்பித்துள்ள ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆட்களுக்கு மிகத் துரிதமாக மேற்படி10 பர்சஸ் வயல் காணியை நிரப்பிக்கொள்ள வாய்ப்பளிப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எத்திகதியிலிருந்து என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

158/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பதுளை மாவட்டத்திலுள்ள மத்திய அரசாங்கத்திற்கு மற்றும் மாகாண சபைக்கு சொந்தமான நீர்ப்பாசனத் திட்டங்கள் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலம் சாகுபடிசெய்யப்படுகின்ற வயல்களின் பரப்பளவு, பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மாகாண சபைக்கு சொந்தமான நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலம் சாகுபடிசெய்யப்படுகின்ற வயல்களின் பரப்பளவு, பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை மத்திய அரசாங்கமும் மாகாணசபையும், பதுளை மாவட்டத்தில் நீர்ப்பாசனங்களின் பராமரிப்புக்காகவும் புனரமைப்பிற்காகவும் செலவு செய்துள்ள நிதித் தொகை, தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

421/ '19

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையில் பதிவாகியுள்ள குற்றச்செயல்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி குற்றச் செயல்கள் ஒவ்வொரு வகைப்படுத்தலின் கீழ் முன்வைக்கப்படுமா என்பதையும்;

(iii) மேற்படி குற்றச் செயல்களின் காரணமாக மரணித்த நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை,

(i) குற்றச்செயல்களைத் தடுப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) கைது செய்யப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) தண்டனை வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) இடம்பெற்றுள்ள குற்றச் செயல்களுக்கு மத்தியில் இதுவரை சட்டரீதியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ள குற்றச்செயல்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

644/ '18

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) Indian Ocean Marine Affairs Cooperation (IOMC) எனும் பெயர் கொண்ட நிறுவனத்திற்கு கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் ஓரிடம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை அறிவாரா;

(ii) அவ்வாறு ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ள அறைகளின் எண்ணிக்கை யாது;

(iii) அதற்கான செலவினம் யாரால் ஏற்கப்பட்டுள்ளது;

(iv) இதற்கென அரசாங்கத்தின் பணம் பயன்படுத்தப்படுமாயின், ஆண்டுதோறும் அதற்காக செலவிடப்படும் தொகை யாது;

(v) அரசாங்கம் இந்த நிறுவனத்தை எவ்வளவு காலமாக பேணி வருகிறது;

(vi) மேற்படி நிறுவனத்திற்காக அரசாங்கம் செலவிடும் பணத்திற்கு கிடைக்கும் பயன்கள் யாவை;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1032/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவு இலக்கம் 246 இன் படி, இலங்கையில் சொகுசு அங்காடிகளின் சொர்க்கபுரி (Shopping Paradise) ஒன்றை உருவாக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட பிரதானமான வரித் திருத்தங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வரித் திருத்தங்கள் காரணமாக ஆடைகள், பாதணிகள், இலத்திரனியல் மற்றும் மின் சாதனங்களின் விலையிலும், புரள்விலும் ஏற்பட்டுள்ள தாக்கம் எவ்வாறானது என்பதையும்;

(iii) 1994 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை இலங்கைக்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் அந்தந்த ஆண்டில் மேற்படி சுற்றுலாப் பயணிகளிடமிருந்து ஈட்டிய வெளிநாட்டுச் செலாவணித் தொகையைக் காட்டுகின்ற அட்டவணையைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1072/ '19

கௌரவ நிமல் லான்சா,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010.01.10 ஆம் திகதி முதல் 2015.01.10 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்றதாக கருதப்படுகின்ற பாரிய ஊழல்கள், மோசடிகள் மற்றும் அரச வளங்கள் சிறப்புரிமைகள், அதிகாரங்கள் மற்றும் தத்துவங்கள் முறைகேடான விதத்தில் பயன்படுத்தப்பட்டமை தொடர்பாக புலனாய்வு செய்வதற்கு சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் யாவர் என்பதையும்;

(ii) மேற்படி உறுப்பினர்களின் பதவிக்காலம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இந் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின்/ அறிவித்தல் களின் இலக்கங்கள் மற்றும் திகதி/ திகதிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி ஆணைக்குழுவின் பதவிக்காலம் யாதென்பதையும்;

(ii) இந்த ஆணைக்குழு தாபிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின்/ அறிவித்தல்களின் இலக்கம்/இலக்கங்கள் மற்றும் திகதி யாதென்பதையும்;

(iii) இப் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், பதவிக்காலம் எத்தேதியிலிருந்து எத்தேதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(v) மேற்படி நீடிப்பு மேற்கொள்ளப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்/ அறிவித்தல்களின் இலக்கங்கள் மற்றும் திகதி/ திகதிகள் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1086/ '19

கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்,— தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டத்திற்காக மாவட்ட விளையாட்டரங்கொன்றை நிருமாணிப்பதற்காக முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் காணியொன்று ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரை குறிப்பிட்ட மாவட்ட விளையாட்டரங்கின் நிருமாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லையென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனின், அந்நிருமாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மன்னார் மாவட்டத்திற்கான மாவட்ட விளையாட்டரங்கின் நிருமாணப் பணிகள் கடந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு சுமார் 50% பணிகள் நிறைவுற்றதன் பின்னர், தொல்பொருளியல் திணைக்களம் குறித்த காணியைப் பரிசீலிக்க வேண்டுமென அறிவித்தமையால், மேற்படி நிருமாணப் பணிகள் சுமார் ஒரு வருட காலமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) மன்னார் மாவட்ட விளையாட்டரங்கின் நிருமாணப் பணிகளை மேற்கொள்வதற்காக தொல்பொருளியல் திணைக்களம் அனுமதி வழங்கி 2 மாதங்கள் கடந்த போதிலும், இதுவரை புனர்நிருமாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) மன்னார் மாவட்டத்திற்கான மாவட்ட விளையாட்டரங்கின் நிருமாணப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்கும் திகதி யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1116/ '19

துஷார இந்துனில் அமரசேன,— சுகாதாரம், போசாணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015ஆம் ஆண்டு முதல் இதுவரையில் குருநாகல் மாவட்டத்தில் பதிவாகியுள்ள நீர்வெறுப்பு நோயாளர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் பிரிவுவாரியாகவும் வெவ்வேறாக யாது;

(ii) தற்போது ஒரு வருட காலமாக வடமேல் மாகாணத்தில் நீர்வெறுப்பு நோய், ஒழிப்பு நடவடிக்கைகள் முறையாக இடம்பெறுவதில்லை என்பதை அறிவாரா;

(iii) இந்த நீர்வெறுப்பு நோய் ஒழிப்பு நடவடிக்கைகளை விலங்கு உற்பத்தி திணைக்களத்திடமிருந்து சுகாதார திணைக்களத்துக்கு கையளிப்பதற்கு ஏதுவான காரணிகள் யாவை;

(iv) எனினும், தற்போது சுகாதார திணைக்களத்தினாலும் நீர்வெறுப்பு நோய் நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படுவதில்லை என்பதை அறிவாரா;

(v) ஆமெனில், நீர்வெறுப்பு நோய் ஒழிப்பு நடவடிக்கைகளை வடமேல் மாகாணத்தில் சிறப்பாக முன்னெடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2019 நவம்பர் 07, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

61/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— அமைச்சரவை அந்தஸ்த்தற்ற வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையில் பேணிவரப்படுகின்ற வானொலி அலைவரிசைகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வானொலி அலைவரிசைகளை பேணிவருகின்ற நிறுவனங்கள் யாவை;

(iii) மேற்படி வானொலி அலைவரிசைகளின் உரிமையாளர்கள் யார் மற்றும் மேற்படி அலைவரிசைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள திகதிகள் வெவ்வேறாக யாவை;

(iv) இன்றளவில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு ஒலிபரப்பு மேற்கொள்ளப் பட்டுவராத வானொலி அலைவரிசைகள் உள்ளனவா;

(v) ஆமெனில், அந்த அலைவரிசைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வானொலி அலைவரிசைகளை ஒழுங்குமுறைப்படுத்துகின்ற நிறுவனம் யாது;

(ii) தற்போது மேற்படி வானொலி அலைவரிசைகளை ஒழுங்குமுறைப்படுத்தல் முறைசார்ந்த வகையில் இடம்பெறுவதில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(iii) சமூகப் பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் ஒருசில வானொலி அலைவரிசைகள் மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற பிரச்சாரங்கள் ஒலிபரப்பப்படுவதை தடுப்பதற்காக வானொலி அலைவரிசைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக முறைசார்ந்த முறையியலொன்றை துரிதமாக தயாரிப்பாரா;

(iv) ஆமெனில், அது எவ்வாறு;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

168/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாண முதலமைச்சரின் கல்வி ஆலோசகராக திரு. சுஜீவ ஜயசிங்க நியமிக்கப்பட்டிருந்தார் என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், இவர் அப் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி மற்றும் இவருக்கு செலுத்தப்பட்ட மாதாந்த கொடுப்பனவுகள் யாவை என்பதையும்;

(iii) இவருடைய கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள் யாவை என்பதையும்;

(iv) குறிப்பாக கல்வித்துறை தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்கு இவரிடமிருந்த தகைமைகள் யாவை என்பதையும்;

(v) இந் நியமனம் தொடர்பாக கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை இச் சபைக்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

273/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டில் மொனறாகலை மாவட்டத்தின் புத்தள பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள '*ராத்திரி*' வாவியை மறுசீரமைப்பதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட சுற்றாடல் மற்றும் பிற அங்கீகாரங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) இக்கருத்திட்டத்திற்குரிய மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மறுசீரமைப்புப் பணிகள் யாவையென்பதையும்;

(iv) சம்பந்தப்பட்ட மதிப்பீட்டின் முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி மறுசீரமைப்பின்போது வாவியின் ஆழம் மற்றும் பரப்பளவை அதிகரிக்கச் செய்வதற்காக வாவியின் அடியில் மண் அடுக்குகள் அகற்றப்பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(vi) மேற்படி மண் அடுக்குகள் அகற்றப்பட்ட விதம் மற்றும் அவை அப்புறப்படுத்தப்பட்ட இடம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

650/ '18

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கந்தளாய்-பாத்தியகம விளையாட்டு மைதானத்திற்கு அருகில் அமைந்துள்ள சுமார் 1.8 கிலோ மீற்றர் நீளமான வீதிகளின் சில பகுதிகளுக்கு காப்பற் இடுவதற்கான சகல நடவடிக்கைகளையும் பூர்த்தி செய்து காப்பற் இடும் பணி மாத்திரம் எஞ்சியிருந்த நிலையில், கடுமையான மழை காரணமாக கைவிடப்பட்ட அப்பணி 2015 ஆம் ஆண்டில் அரசாங்கம் மாறியதைத் தொடர்ந்து ஸ்தம்பிக்கப்பட்டுள்ளதை அறிவாரா;

(ii) ABC கற்களும் இடப்பட்டு வீதி செப்பனிடப்பட்டுள்ளதால், இதுவரை ஏற்றுள்ள செலவுகளுக்கான பலனைப் பெற்றுக்கொள்வதற்காக அந்த வீதிகளின் பகுதிகளுக்கு காப்பற் இட நடவடிக்கை எடுக்கப்படுமா;

(iii) கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவில் அதிகமான மக்கள் வசிக்கும் பாத்தியகம இவ்வாறு புறக்கணிக்கப்படுவது ஏன்;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

781/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு.— (1)

(அ) (i) 2014.08.05 ஆம் திகதி முதல் சிறு தேயிலை சிறுபற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் உதவி முகாமையாளராக (மனித வள மற்றும் நிருவாகம்) பணியாற்றியுள்ள உத்தியோகத்தர், மூன்று வருட காலப்பகுதியினுள் குறிப்பிட்ட பதவிக்காகத் தோற்றவேண்டிய வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் தோற்றியுள்ளாரா;

(ii) மேற்படி பதவி வகிப்பவர் குறிப்பிட்ட பரீட்சையில் தோற்றாத அல்லது குறிப்பிட்ட பரீட்சையில் சித்தியடையாதவரெனில், உடனடியாக அப்பதவியிலிருந்து நீங்க வேண்டும் என்பதை அறிவாரா;

(iii) இதற்கேற்ப 2017.08.05 ஆம் திகதிக்குப் பின்னரும் குறிப்பிட்ட உத்தியோகத்தரை மேற்படி பதவியில் வைத்திருத்தல் தொடர்பில் அதிகாரசபையின் பணிப்பாளர் சபைக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

874/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— மாநகர மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹொரணை வீதியூடான பெப்பிலியான மற்றும் பாமன்கட ஆகியவற்றுக்கு இடையிலான அபிவிருத்தி வேலையை நிறுத்தியமைக்கான காரணங்களையும்;

(ii) இலகு ரயில் கருத்திட்டத்திற்கான பிரச்சாரத்தை மேற்கொள்வதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட வேலை நிறைவுசெய்யப்படக்கூடாதா என்பதையும்;

(iii) இலகு ரயில் கருத்திட்டம் மீதான ஆலோசனை நடவடிக்கைகள் மற்றும் அரச ஆய்வுகருவிகள் மற்றும் பிரச்சாரம் மீது ஏற்கனவே செலவிடப்பட்டிருக்கும் தொகையையும்;

(iv) மேலே (iii) இல் குறிப்பிட்டவாறு செலவிடப்பட்ட பணத்தில் ஜப்பான் வழங்கிய டொலர் நிதி எவ்வளவு என்பதையும்;

(v) மேற்கூறிய கருத்திட்டத்திற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள வெளிநாட்டு ஆலோசகர்கள் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச நிறுவனங்களினால் விதந்துரைக்கப்பட்டிருக்கின்றனரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

940/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எமது நாட்டின் பிரதான அரச வங்கிகளாகிய இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகிய வங்கிகளின் சில பணியாளர்கள் அரசியல் ரீதியான பழிவாங்கல்களுக்கு உள்ளாகி இருப்பதாக சிபாரிசு செய்யப்பட்டு பதவி உயர்வுகள், நிதி ரீதியான அனுகூலங்கள் மற்றும் பல்வேறு வரப்பிரசாதங்களையும் நன்மைகளையும் பெற்றுக் கொடுப்பதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) கடந்த ஆட்சியின் போது வங்கிகளில் அரசியல் ரீதியான பழிவாங்கல்கள் இடம்பெறவில்லை என்பதை ஏற்றுக் கொள்வாரா;

(iii) இன்றேல், ஏன்;

(iv) வங்கி ஊழியர் சங்கம் உட்பட அனைத்து ஊழியர்களினதும் எதிர்ப்புக்கு மத்தியில், வங்கித்துறை வரலாற்றில் இதற்கு முன்னர் இடம்பெற்றிராத வகையில் கட்சி ஆதரவாளர்கள் சிலருக்கு விசேட வரப்பிரசாதங்கள் வழங்கும் மேற்குறித்த வேலைத்திட்டங்களை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1021/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்நாட்டிலுள்ள வாடகை வீட்டுக் குடியிருப்பாளர்களுக்கு வதியும் இடத்தின் உரித்தினை உறுதிப்படுத்துவதற்கு இயலாமை, நீர் கட்டணச் சிட்டைகள் மற்றும் மின் கட்டணச் சிட்டைகள் போன்றவற்றை சமர்ப்பிக்க இயலாமை போன்ற காரணங்களினால் இவர்களின் பிள்ளைகளை பாடசாலையொன்றில் சேர்ப்பதற்கு சிரமங்கள் உள்ளதென்பதையும்;

(ii) அவ்வாறாகவே, அடையாள அட்டையினை பெற்றுக்கொள்வதும் சிரமமாக உள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இவ்வாறான மிகவும் முக்கியமான பிரச்சினைகளுக்கு தீர்வாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1061/ '19

கௌரவ இஸ்ஹாக் ரஹுமான்,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கெக்கிராவை தொடக்கம் கனேவல்பொல நகரம் வரை ஓடுகின்ற சுமார் 7 கி.மீ. நீளமுடைய வீதியானது, கண்டி – அநுராதபுரம் வரை ஒடுகின்ற A - 9 வீதியின் கெக்கிராவ நகரத்திலிருந்து அநுராதபுரம் – மட்டக்களப்பு வரை ஓடுகின்ற A - 11 வீதியில் கனேவல்பொல நகரத்திற்குப் பிரவேசிப்பதற்கான கிட்டிய வழி என்பதையும்;

(ii) இவ்வீதிப் பகுதியானது 50 வருடங்களுக்கும் அதிகமான காலம் அபிவிருத்தி செய்யப்படவில்லையென்பதையும்;

(iii) கடந்த அரசாங்கத்தின் கீழ் இவ்வீதிக்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் தற்போது அப்பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இவ்வீதியினை அபிவிருத்தி செய்வதன் பொருட்டு துரிதமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1117/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவம் பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பன்டுவஸ்நுவர தேர்தல் தொகுதியில், ஹெட்டிபொல எனும் பெயரில் பிராந்திய வைத்தியசாலையொன்று உள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனின், இவ்வைத்தியசாலைக்கான அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ பணியாட்டொகுதியின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) தற்சமயம் இவ்வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாவை என்பதையும்;

(iv) இப்பிரதேசத்தின் சொத்தான மேற்படி வைத்தியசாலைக்கு தேவையான பௌதீக மற்றும் மனித வளங்களை பெற்றுக்கொடுத்து, இவ்வைத்தியசாலையை மேலும் விருத்தி செய்வதற்கு அமைச்சு எடுக்கும் வழிமுறைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1137/ '19

கௌரவ கனக ஹேரத்,— அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு.— (1)

(அ) (i) இலங்கையினுள் தாபிக்கப்பட்டுள்ள ஏற்றுமதி தயாரிப்பு வலயங்கள் இந்நாட்டு பொருளாதாரத்துக்கு கணிசமான பங்களிப்பினை வழங்குகின்றனவா;

(ii) அம்பாந்தோட்டை, மிரிஜ்ஜவெல மற்றும் பிங்கிரிய ஆகிய பிரதேசங்களை மையமாகக் கொண்டு புதிய ஏற்றுமதி தயாரிப்பு வலயங்களை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா;

(iii) ஆமெனில், அத்திகதி யாது

(iv) மேற்படி ஏற்றுமதி தயாரிப்பு வலய நிர்மாணக் கருத்திட்டங்களின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாது;

(v) மேற்படி புதிய ஏற்றுமதி தயாரிப்பு வலயங்களின் நிர்மாணப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர், அவற்றின் பங்களிப்பினை இந்நாட்டுப் பொருளாதாரத்துக்கு பெற்றுக்கொள்வதற்கு உத்தேசிக்கப்படும் விதம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1153/ '19

கௌரவ கே. காதர் மஸ்தான்,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சருமானவரை கேட்பதற்கு,— (1)

(அ) (i) வவுனியா மாவட்டத்தின் வெங்கலசெட்டிக்குளம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சூடுவெந்தபுலவு கிராமத்தை அண்மித்த இராசேந்திர குளத்தில் அமைந்துள்ள அரச காணி 1970 ஆம் ஆண்டு தொடக்கம் அப்பிரதேச மக்களினால் சேனைப் பயிர்ச் செய்கைக்கும் மந்தை வளர்ப்புக்கும் பிரயோகிக்கப்பட்டு வருவதை அறிவாராவென்பதனையும்;

(ii) ஆமெனில், காணி ஆணையாளர் நாயகத்தின் 2013/01 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய காணிக் கச்சேரிகளின் ஊடாக காணி அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதியான நபர்களாக அடையாளம் காணப்பட்ட நபர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதனையும்;

(iii) அவர்களுடைய பெயர்கள் மற்றும் ஏனைய விபரங்களையும்;

(iv) இதுவரையில் அவர்களில் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெற்றவர்களின் எண்ணிக்கையும்;

(v) அடையாளங் காணப்பட்ட அனைவருக்கும் அனுமதிப்பத்திரம் வழங்குவதிலுள்ள தடைகள் என்னவென்பதனையும்;

(vi) அவ்வாறாயின் குறித்த தடைகளை நீக்கி அனைவருக்கும் காணி அனுமதிப் பத்திரங்களை வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுமா என்பதனையும்;

(vii) எப்போது அக்காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுமென்பதனையும்;

அவர் இச்சபைக்கு அறிவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1156/ '19

கௌர டீ.வீ.சானக்க,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 சனவரி தொடக்கம் இற்றைவரையில்,

(i) வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) "கம் உதாவ" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) வீடமைப்பு நிர்மாண கருத்திட்டம் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கு மேற்கொள்ளப்பட்ட பிரச்சார நடவடிக்கைகளுக்கு செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

ஆண்டு வாரியாக தனித்தனியே அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மக்களுக்கு வீடுகளை பெற்றுக்கொடுக்கும் போது தவணைக் கொடுப்பனவு முறையில் வீடுகள் வழங்கப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனின், இவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்த கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) "கம் உதாவ" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் வீடுகளின் பரப்பளவு எத்தனை சதுர அடிகள் என்பதையும்;

(iv) கருத்திட்டத்திற்கு கருத்திட்டம் வீடுகளின் சதுரஅடிகளின் அளவு மாற்றமடையுமா என்பதையும்;

(v) "கம் உதாவ" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் வீடுகளுக்கு அடிப்படை சுகாதார வசதிகள் வழங்கப்படுமா என்பதையும்;

(vi) வீடுகளை பெற்றுக்கொடுக்கும் போது பயனாளிகளை தெரிவு செய்வதற்கு ஏதேனும் முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1168/ '19

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை சுங்க திணைக்களத்தின் சுங்க உத்தியோகத்தர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவின் கணிப்பீடு தாபனவிதிக் கோவையின் VIII ஆவது அத்தியாயத்தின் 6.1 உப பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இதற்கு மேலதிகமாக இலக்கம் 1570/17 மற்றும் 2007.10.26 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் சுங்க உத்தியோகத்தர்களை மேலதிகநேர சேவையில் ஈடுபடுத்துவதற்கான கட்டணம் குறித்துரைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ஆ) (i) சுங்க உத்தியோகத்தர்களுக்கு மேலதிகநேரக் கொடுப்பனவு செலுத்தும் போது மேற்படி வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகள் பின்பற்றப்படுவதில்லை என்பதையும்;

(ii) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு மிகக் குறைந்த மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்தப்படுவதால், அவர்களுக்கு பாரதூரமான அநீதி இழைக்கப்படுவதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனின், சுங்க உத்தியோகத்தர்களுக்கு சட்டரீதியாக கிடைக்கவேண்டிய மேலதிக நேரக்கொடுப்பனவினை தாபனவிதிக் கோவையின்படி கணிப்பிடுவதற்கும் இதுவரையில் உரியவாறு செலுத்தாத மேலதிகநேரக் கொடுப்பனவை நிலுவைத் தொகையுடன் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1177/ '19

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தினால் நிருவகிக்கப்படுகின்ற சிறுவர் இல்லங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அவற்றில் இருக்கின்ற மொத்த சிறுவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி எண்ணிக்கை ஒவ்வொரு சிறுவர் இல்லத்தின் அடிப்படையில் வெவ்வேறாக யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தனியார் துறை, சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களினால் நிருவகிக்கப்படுகின்ற சிறுவர் இல்லங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு இல்லத்திலும் தங்கியுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை, முகவரி மற்றும் நிருவகிக்கும் நிறுவனத்தின் பெயர் வெவ்வேறாக யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கடந்த இருபது வருட காலப்பகுதிக்குள் பெற்றோர்/பாதுகாவலர் அந்தஸ்தை சட்டபூர்வமாக உரித்தாக்கிக் கொண்டு வெளிநாட்டவர்களினால் பொறுப்பு கையேற்கப்பட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி சிறுவர்கள் தற்போது வாழும் நாடு, அவர்களின் பாதுகாவலர்களின் முகவரிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) நாட்டினுள் காணப்படுகின்ற ஏதேனும் சிறுவர் இல்லம் தொடர்பில் நீதிமன்ற உத்தரவு கிடைத்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி உத்தரவு சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பிலாயின், சம்பந்தப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

## 2019 நவம்பர் 08, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

23/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) இரத்தினபுரி மாவட்டத்தில், வெலிகெபொல பிரதேச செயலாளர் பிரிவில், அம்பேவில சந்தியிலிருந்து ரங்வல ஊடாக செல்கின்ற உடவெல வீதியானது பல வருட காலமாக திருத்தப்படாமையின் காரணமாக கடுமையாகச் சேதமடைந்துள்ள தென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதி உரித்தாகும் நிறுவனம் யாது;

(ii) மேற்படி வீதியை போக்குவரத்துக்கு உகந்த வகையில் திருத்தியமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், திருத்தியமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி மற்றும் பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாது;

(iv) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதித்தொகை யாது;

(v) தற்போது மேற்படி நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

162/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பண்டாரவளை மாநகர சபைக்கு சொந்தமான வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வாகனத்தினதும் இலக்கம் யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு வாகனமும் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் பிரிவு யாதென்பதையும்;

(iv) நகர சபைக்கு சொந்தமான வாகனங்கள் வேறு பிற நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாயின், அவ்வாறு வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் களினதும் நிறுவனங்களினதும் பெயர்கள் யாவையென்பதையும்;

(v) பண்டாரவளை மாநகர சபைக்கு சொந்தமான வாகனங்களை வேறு தரப்புகளுக்கு வழங்கும் போது ஏதேனும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாயின் அது சம்பந்தமாக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

276/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் வறுமையை அளவிடுகின்ற பொருளாதார சுட்டெண்கள் யாவையென்பதையும்;

(ii) இதற்கு அமைவாக இன்றளவில் உள்ள வறிய மக்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கையில் வறுமை அடிப்படையில் முதல் 10 பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை என்பதையும்;

(iv) இலங்கையில் மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களின் அடிப்படையில் வறுமை பற்றிய முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) கடந்த 10 ஆண்டு காலத்தினுள் இலங்கையின் வறுமை பற்றிய முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

661/ ' 18

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கையில் அமைந்துள்ள,

(i) வன ஒதுக்கங்களின் அடர்த்தியும்;

(ii) வன ஒதுக்கங்களில் அமைந்துள்ள குளங்களின் எண்ணிக்கையும்;

(iii) மழைக் காடுகளும் அவற்றின் அடர்த்தியும்;

வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) தங்கள் அமைச்சின் மூலம் 2017 ஆம் ஆண்டில்,

(i) சூழல் பாதுகாப்பு கருதி மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) அதன் பொருட்டு செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) சூழல் நேய தொழில்முயற்சிகளை மதிப்பிடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) பல நகரங்கள் ஊடாக வழிந்தோடும் கழிவு நீர் ஆறுகளில் கலப்பதன் மூலம் பெருமளவில் நீர் மாசடைவதால் இவ்வாறு கழிவு நீர் நேரடியாக ஆறுகளில் கலப்பதைத் தடுக்க அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

765/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மகாவலி கங்கை கடலுடன் கலக்கும் கென்கே பாலத்திற்கு இருமருங்கிலுமான உப்பாறு மற்றும் இறால்குழி ஆகிய இரு பாலங்களும் மகாவலி கங்கையின் கிளை நீரோட்டங்களின் மீது அமைந்துள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கிளையாறான உப்பாறு மகாவலி கங்கையின் மடன்தெட்டிக்கு மேலாகவும், இறால்குழி கிளையானது மணலாறு எனும் இடத்திலும் மகாவலி கங்கையுடன் கலக்கின்ற போதிலும், கென்கே களப்பின் கடல் நீர் மகாவலி கங்கையில் கலப்பதை தவிர்க்கும் முகமாக அமைந்துள்ள மணல் திட்டில் மணல் அகழ்வதற்கு பிரதேச செயலாளரின் விதப்புரையின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள மணல் அகழ்வு உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி உரிமப்பத்திரதாரர்களின் பெயர்கள், விலாசங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்டுள்ள மணல் கியூப்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) 2016 யூன் மற்றும் 2018 மே மாதங்களில் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தினால் வெளியிடப்பட்டுள்ள இரண்டு மதிப்பீட்டு அறிக்கைகளினதும் பிரதிகளைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) மேற்படி அறிக்கைகளின் விதப்புரைக்கு ஏற்ப, மணல் அகழ்வு உரிமப்பத்திரங் களை வழங்குவதில் காணப்படும் தடைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

798/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் உபதலைவர் மற்றும் நடவடிக்கைப் பணிப்பாளர்களின் உபயோகத்திற்காக வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களின் பதிவு இலக்கங்கள் மற்றும் அவற்றின் வகைகள் யாவை என்பதையும்;

(iii) அவற்றில் வாடகை அடிப்படையில் அல்லது குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள வாகனங்கள் உள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி வாகனங்களின் வகைகள் மற்றும் பதிவு இலக்கங்கள் யாவை என்பதையும்;

(v) 2016.01.01 முதல் இன்றுவரை மேலே (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வாகனத்திற்கும் மாதாந்தம் செலுத்தப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(vi) இதுவரை மேற்படி வாகனங்களுக்கு எரிபொருளுக்காக மாதாந்தம் செலுத்தியுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

810/ '19

கௌரவ வாசுதேவ நாணயக்கார,— நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உயர் கல்வி அமைச்சின் கீழ் செயற்படுகின்ற பல்கலைக்கழகங்கள் அல்லாத ஏனைய உயர் கல்வி நிறுவனங்களால் நடாத்தப்படுகின்ற பொறியியல், கணக்கியல் மற்றும் வேறு தொழில்சார் பாடநெறிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்கள் ஒவ்வொரு பாடநெறிக்காக அறவிடுகின்ற கட்டணம் எவ்வளவென்பதையும்;

(iii) அமைச்சின் கீழுள்ள பல்கலைக்கழகங்களில் நடாத்தப்படுகின்ற கட்டணம் அறவிடப்படுகின்ற பாடநெறிகள் யாவையென்பதையும்;

(iv) அப்பாடநெறிகள் மற்றும் அறவிடப்படும் கட்டணங்கள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2012 - 2015 காலகட்டத்தில் மேற்படி அ(ii) மற்றும் அ(iv) ஆம் பாடநெறி களுக்கான கட்டணங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவையென்பதையும்;

(ii) அரசாங்க பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கின்ற மாணவர்களின் உதவிப்பணம் ரூ. 5,000/- வரை அதிகரிக்கப்பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(iii) திறந்த பல்கலைக்கழகத்தின் பாடநெறி கட்டணம் வருடாந்தம் 10% அதிகரித்தாலும் ரூ. 312.50 ஆன மாதாந்த உதவிப்பணம் ஏன் அதிகரிக்கபடவில்லை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) அரச மற்றும் அரச சார்பான உயர் கல்வி நிறுவனங்களில் நடாத்தப்படுகின்ற அனைத்து பாடநெறிகள் (முதலாவது பட்டம்/டிப்ளோமா) முழுமையாக கடடணங்களிலிருந்து விடுபடவேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதை இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

903/ '19

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010.12.10 ஆம் திகதிய 01/2010 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் மூலமாக நியதிச்சட்ட அலுவலர்களுக்கு சலுகை அடிப்படையில் வாகனம் இறக்குமதி செய்கையில் இரண்டாம் வாகனத்தைப் பெறுவதற்காக வழங்கப்பட்டிருந்த 5 வருட காலப்பகுதி 2016.07.14 ஆம் திகதிய 1/2016 ஆம் இலக்க சுற்றுநிருபம் 2015.11.21 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு 10 வருடங்கள் வரை நீடிக்கப்பட்டதனால் இதற்காக 2016 ஆம் ஆண்டினுள் தகைமை பெற்ற உத்தியோகத்தர்களுக்கு பாரிய அநீதி இடம்பெற்றுள்ளது என்பதையும்;

(ii) 2018.06.08 ஆம் திகதிய 01/2018(1) ஆம் இலக்க சுற்றுநிருபம் 2018.06.09 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு அக்காலப்பகுதி 5 ஆண்டுகள் வரை குறைக்கப்பட்டதால் 2016 ஆம் ஆண்டு முதல் 2018.06.08 ஆம் திகதி வரை ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கு அவ்வுரிமை கிடைக்காமல் போனது என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட 01/2018(1) சுற்று நிருபத்திற்கு அமைவாக அமைச்சரவை தீர்மானத்தில் 2018.06.08 அல்லது 2018.06.09 எனத் திகதிகள் குறிப்பிடப்படாததால் ஏனைய நிறுவனங்களில் அதற்கு சமமான மட்டத்தில் ஓய்வு பெற்றிருந்த அலுவலர்களுக்கு உரித்தாகியிருந்த ரூபா 3.6 மில்லியன் பெறுமதியான அனுமதிப்பத்திரம் 01/2018(1) சுற்றுநிருபத்தின் மூலம் இவ்வலுவலர்களுக்கு அற்றுப்போகச் செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) அதற்கமைவாக, 2016 ஆம் ஆண்டு முதல் 2018.06.08 வரையில் ஓய்வு பெற்ற, 2015 சுற்றுநிருபத்திற்கு அமைவாக தகைமைகளை பூர்த்தி செய்திருந்த அனைத்து அலுவலர்களுக்கும் இவ்வனுமதிப்பத்திரம் வழங்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) இன்றேல், ஏன்?

932/ '19

கௌரவ முஹம்மது நசீர்,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கண்டி மாவட்டத்தில், வழி இலக்கம் 595 ஊடாக பங்கொல்லாமடவில் இருந்து அக்குறணை, கண்டி வழியாக மஹரகம மற்றும் கொழும்பை வந்தடையும் வகையில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தொன்று நாள்தோறும் அதிகாலை 4.15 இற்கு சேவையில் ஈடுபட்டிருந்ததை அறிவாரா என்பதனையும்;

(ii) மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு வருகை தரும் நோயாளர்கள் உட்பட பொது மக்களது நலன் கருதி சேவையில் ஈடுபடுத்தியிருந்த அந்த பேருந்து சேவையை நிறுத்துவதற்கு கொள்கைரீதியான தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) குறித்த பேருந்து, சேவையில் ஈடுபடுத்தப்பட்ட இறுதித் திகதி யாது என்பதையும்;

(iv) மேற்படி பேருந்து சேவையை வாரத்தின் அனைத்து நாட்களிலும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

939/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணர்வதன,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015 முதல் 2018 ஆம் ஆண்டு வரை,

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்துள்ள அரிசியின் அளவு எத்தனை மெற்றிக் தொன் என்பதையும்;

(ii) அரிசி இறக்குமதிக்காக செலவிடப்பட்டுள்ள அந்நிய செலாவணி எவ்வளவென்பதையும்;

(iii) அரிசி இறக்குமதிக்காக அறவிடப்பட்ட விசேட வர்த்தக பண்டங்கள் வரி எவ்வாறு திருத்தப்பட்டதென்பதையும்;

(iv) அரசாங்க நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு மற்றும் மேற்படி நிறுவனங்கள் அரிசி விற்பனையின் மூலமாக ஈட்டிக்கொண்டுள்ள இலாபம் அல்லது நட்டம் வருட வாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

968/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தொண்டர் பொலிஸ் கான்ஸ்டபிளாக சேவையாற்றியவர்கள் 9/1374/360/047 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தின் படி இலங்கை ஆசிரியர் சேவை 3-II தரத்திற்கு உள்ளீர்க்கப்பட்டதென்பதையும்;

(ii) இவர்கள் ஆசிரியர் பற்றாக்குறை நிலவிய வெலிஓயா போன்ற பின்தங்கிய பிரதேசங்களுக்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டார்கள் என்பதையும்;

(iii) இதனால் ஆசிரியர் பற்றாக்குறையினால் மூடப்படவிருந்த அப்பிரதேச பாடசாலைகளை மீள கட்டியெழுப்பக் கூடியதாக இருந்ததென்பதையும்;

(iv) எனினும், இவர்களது எதிர்ப்பை கவனிக்காது அவர்களை மீண்டும் தொண்டர் சேவையில் ஈடுபடுத்துவதற்கான முயற்சிகள் காணப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இவர்களின் கோரிக்கையின் படி இவர்களை இலங்கை ஆசிரியர் சேவையில் நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

977/ '19

கௌரவ இஷாக் ரஹுமான்,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் அத்தியாவசியமற்ற அலுவலர்கள் மிகையாகவும் அத்தியாவசிய அலுவலர்கள் பற்றாக்குறையாகவும் இருப்பதை அறிவாரா;

(ii) மேற்படி அலுவலர்களின் எண்ணிக்கையை சமநிலைப்படுத்தி மக்களுக்கு மேலும் பயன்மிக்க சேவையை வழங்குவதற்காக நடவடிக்கை மேற்கொள்கின்ற திகதி யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1003/ ' 19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு மார்ச்சு 18 ஆம் திகதியன்று, கொழும்பு செங்கிரிலா ஹோட்டலில் நடைபெற்ற "நேர்மை திறன் மாநாடு" எனப்படும் அரச சேவையில் இலஞ்சத்தை ஒழிப்பதற்கான ஐந்தாண்டு திட்டத்தை வெளியிடுவதற்காக நடைபெற்ற விழாவை ஏற்பாடு செய்த நிறுவனம் யாதென்பதையும்;

(ii) அவ் விழாவுக்குச் செலவான முழுத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அவ் விழாவில் பங்கேற்ற அழைப்பு விருந்தினர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) அதற்கான செலவை ஏற்ற நிறுவனம் யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1023/ '19

கௌரவ ரோஹித்த அபேகுணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கடந்த 5 ஆண்டுகளுக்குள்,

(i) மதுவரி சட்டத்தின் 58 "அ" பிரிவின் கீழ் மதுவரி அலுவலர்களுக்கு வெகுமதிகளை வழங்குவதற்கான நிதியத்திலிருந்து 818 அறிவித்தலை மீறி நிதிசார் முறைகேடுகளை மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கியவர் யாரென்பதையும்;

(ii) அவ்வறிவித்தலின்படி வருமானம் சேகரிக்கின்ற சீருடை அணிகின்ற பணியாட்டொகுதியினரின் 1200 பேருக்கும் வருமானம் சேகரிக்காத சீருடை அணியாத 150 பேருக்கும் வருடாந்தம் செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும் அப்பணம் நிதியத்தின் எத்தனை வீதம் என்பதையும்;

(iii) அவ்வறிவித்தலின் (vi) இன் விசேட நிபந்தனைகளின் எல்லையை நெருங்காத சீருடை அணிகின்ற அலுவலர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 5.2 பிரிவினை மீறி, கடந்த 5 ஆண்டுக்குள் சட்டரீதியற்றவகையில் பணம் செலுத்த அங்கீகாரம் வழங்கியவர் யாரென்பதையும்;

(ii) 7.2-ii இல், உரிமை கோரக்கூடிய பணியாட்டொகுதியினருக்கு கடந்த 5 ஆண்டுக்குள் எத்தனை அளவை மீறிய வெகுமதி செலுத்தப்பட்டுள்ளது என்பதையும்; அது மொத்த வெகுமதி நிதியத்தின் வருமானத்தில் எத்தனை வீதம் என்பதையும்;

(iii) 77.2-ii இன் தரங்களுக்கு, உரித்தான பகுதியுடன் தொடர்புடைய பணத் தொகையைச் செலுத்தி, எஞ்சியதை 5.2 இன் கீழ் சட்டரீதியற்ற முறையில் வரவுவைத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி சட்டவிரோதமான சமநிலையற்ற பணம் செலுத்தல் தொடர்பாக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1034/ '19

கௌரவ கனக ஹேரத்,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு ,— (2)

(அ) (i) யட்டியாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவிற்கு உரித்தான சீபோத் பிரிவில் அமைந்துள்ள சென்ட் கெத்தரின் தோட்டம் களனி கங்கையின் நீரேந்துப் பகுதி என்பதுடன் அது மரைகள், மான்கள் ஆகிய விலங்குகளின் வாழ்விடம் என்பதனையும்;

(ii) அது உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் கவனத்தை ஈர்த்துள்ள பிரதேசம் என்பதனையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த தோட்டத்தில் 50 ஏக்கர் காணியொன்றினை பிரித்து தனியார் ஒருவருக்கோ அல்லது குழுவொன்றிற்கோ வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதா என்பதையும்;

(ii) அதற்கென காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவினூடாக நிலஅளவைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(iii) அந்த நிலஅளவை நடவடிக்கைகள் அரசாங்க விடுமுறை நாட்களில் இரகசியமாக மேற்கொள்ளப்படுவதற்கான காரணம் யாதென்பதையும்;

(iv) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் அப்பிரதேசம் தொடர்பில் தனியார் துறையினரால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோள்கள் சுற்றாடல் முக்கியத்துவம் காரணமாக மக்களது எதிர்ப்பின் காரணமாக நிராகரிக்கப்பட்டாலும், இந்த நிலைமையின் கீழ் அந்த பிரச்சினைகள் மீண்டும் ஏற்பட மாட்டாதா என்பதனையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?